[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 14

குறிப்பிட்டார்கள். நான், மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ அவர்களுக்குத் தெரிவிப்பது, ஆளுங்கட்சிக்கு ஒரு நியதி, எதிர்கட்சிக்கு ஒரு நியதியா என்று கேட்டார்கள். நிச்சயமாக அந்த நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இது சம்பந்தமாக என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து ஒரு நல்ல தீர்வு காண அரசு முற்படும் என்பதைத் தெரிவித்து, இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு நான் உண்மையிலே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து, அதோடு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லையென்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10.30]

(ஆ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பற்றிய ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசை வெளியிட்டு அமுல் நடத்தவும் மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் மாநிலம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் 12.3.79 முதல் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தொடர்ந்து மறியல் செய்து வருவதால் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், 2. திரு. ஆர். கிருஷ்ணன், 3. திரு. என். வரதராசன், 4. திரு. தே. ஞானசிகாமணி, 5. திரு. சி. கோவிந்தராசன், 6. திரு. சோ. அழகர்சாமி, 7. திரு. மு. அம்பிகாபதி, 8. திரு. சேலம் மு. ஆறுமுகம், 9. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, 10. திரு. ஏ. ஆர். மாரிமுத்து, 11. திரு. செ. சதாசிவம், 12. திரு. சொ. ந. பழனிசாமி, 13. திரு. ஓ. சுப்பிரமணியன், 14. திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் தீர்மானம் கேட்டிருக்கிறார்கள், இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்குமாறு திரு. பி. சொரணம் அவர்களை அழைக்கிறேன்.........

1979 மார்ச் 14]

திரு. எஸ். சிவசாமி : தலைவர் அவர்களே நானும் இதற்கு பெயர் கொடுத்திருக்கிறேன்—ஆனால் என்னுடைய பெயர் படிக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குக் கொடுத்திருக்கிற உறுப்பினர்களின் கடிதங்களில் உங்கள் பெயர் இல்லை ; இருப்பதை எல்லாம் படித்துவிட்டேன்.

சேலம் திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் நான் கொடுக்கும்போது தான் சேர்த்து கொடுத்தார்கள்....

கூத்தகுடி திரு. ச. சண்முகம், : (எழுந்திருக்கிறார்) தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு கொடுத்த குறிப்பேட்டில் இல்லையென்றாலும் உங்கள் பெயரையும் படித்து விடுகிறேன். திரு. செ. சிவசாமி, திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு. சி. ஆறுமுகம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக தெரிவிக்க வேண்டு கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளத் தொழிலாளர்களுடைய போராட்டம் சம்பந்தமாக விவாதிப்பதற்காக ஏன் இந்த அவை ஒத்தி வைக்கவேண்டும் என்று விளக்குவதற்காக நான் இங்கு முன் வந்திருக்கிறேன். பொதுவாக கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்த வரையில் தமிழகத்திலே விவசாயிகளுக்கு அடுத்த படியாக அதிகமான மக்கள் பிரதானமாக இந்த புராதனமான தொழிலைச் செய்து வருகிறார்கள். இந்தத் தொழிலைப் பற்றி, இங்கே இருக்கிற படங்களிலே இருக்கின்ற வள்ளுவர் கூட '' செய்யும் தொழிலை சீர் தூக்கிப்பார்க்கின் .... என்று சொன்னார். அந்தப் புராதன தொழில் இன்று சீர் குலைந்ததோடு மாத்திரம் அல்ல அது மிகவும் மோசமான நிலையை எட்டக்கூடிய நிலைமை வந்துக் கொண்டிருக்கிறது. அவைகளை பாதுகாக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் கிட்டத்தட்ட தமிழகத்திலே 30 லட்சம் பேர்களுக்கு வாழ வழி செய்யக் கூடிய இந்த தொழில் இன்றைக்கு அழிந்து போகக்கூடிய சூழ்நிலையில் இருப்பதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் இந்த வேலை மறியலை செய்திருக்கிறார்கள். அவர்கள் நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக ராஜா சுப்பிரமணியம் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டது. அந்த கமிட்டியினுடைய அறிக்கையும் கொடுக்கப்பட்டு

ஆண்டுகள் பல ஆகின்றன். இதனை வெளியிட வேண்டும் என்று பல கட்சிகள் வற்புறுத்தியும் கூட இன்னும் வெளியிடப் படவில்லை என்ற நிலையை வேதனையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த கோரிக்கை மாத்திரம் அல்ல, குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும், அவர்களின் மொத்த வருட ஊதியத்திலே பன்னிரண்டில் ஒரு பங்கு (1/12) பணத்தை போனஸாக கொடுக்கப்பட வேண்டும். கம்போசிட் மில்களுக்கு வழங்கப்படக் கூடிய நூலினுடைய விலையிலேயே இவர்களுக்கும் நூல் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் அந்த மில் முதலாளி களுக்கு வழங்கப்படும் நூலின் விலையைவிட இவர்களுக்கு கொடுக்கப்படும் நூலின் விலை 35 சதவீதத்திலிருந்து 40 சதவிகிதம் வரை அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவே சென்ற 12, 13 தேதிகளிலே, இந்தக் கைத்தறி நெசவுத் தொழி லாளர்கள், மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தொடர்ந்து மறியல் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அரசினுடைய கவனக்குறைவே காரணம் என்றும் அதனால் தான் இந்த நிலை ஏற்பட்டது என்றும் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலையின் காரணமாக 12, 13, மற்றும் இன்றைய தேதிகளிலும் கூட மறியல் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த மறியல் நடத்துவதில் குறிப்பிட்ட கட்சிகள் என்று எதுவும் இல்லை. எல்லாக் கட்சிகளிலும் உள்ளவர்கள் அந்த இயக்கத்தில் மறியலில் ஈடுபட்டு இருக் கிறார்கள். ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால், மதுரையில் நேற்றைய முன்தினம் கைது செய்யப்பட்ட 159 கைத்தறி நெசவுத் தொழிலாளர்களிலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் 3 பேர், தி.மு.க. 34, ஜனதா 19, சி.பி.ஐ. 4, கா.கா.தே.கா. 2. இந்திரா காங்கிரஸ் 2 மீதம் C.P.M. என்று இப்படி மாநிலம் பூராவும் போலீசாரால் பல்லாயிரக்கணக் கானவர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதால், மக்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, இது குறித்து அனைத்துக்கட்சி சார்பிலே உள்ள உறுப்பினர்கள் சேர்ந்து விவாதித்து ஒரு முடிவு எடுக்க வழிவகுக்கும் வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. செ. சிவசாமி ; மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடு முழுவதும் கைத்தறியாளர்கள் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அரசு அவர்கள் மீது யுத்தமே தொடுத்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். மதுரையில் கிட்டதட்ட 287 பேர் கைதாகி யிருக்கிறார்கள். தருமபுரியில் 190 பேர் கைதாகி இருக்கி

றார்கள். கும்பகோணத்தில், திண்டுக்கல்லில் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இப்படி ஆயிரக்கணக்கான பேர் கைதாகியிருக்கிறார்கள். தமிழகத்தில் இப்படி உடைகளை உற்பத்தி செய்பவர்களை ஒடுக்குவதற்காக கைது செய்யப்பட வேண்டிய காரணம் என்ன? இப்படிப்பட்ட ஏழைப்பட்டாளத்தின் மீது அரசு போர் தொடுக்க வேண்டியதன் அவசியம் என்ன? அவாகள் கேட்பது என்ன? எங்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவேண்டும், லீவு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று சாதாரண கோரிக்கைகளை வைத்து அவர்கள் இன்றைக்குப் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளின் மீது இந்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிற காரணத்தால்தான் இன்றைக்கு எங்கே பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது, எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்து விட்டது. அந்த நிலைகளை கணக்கிட்டு அரசாங்கம் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏற்கனவே ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் அதைகொடுக்க வேண்டும் என்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நூல் விலை ஏறுகிறது, நூல் விலை ஏற்றத்தின் காரணமாக துணி விலை ஏறி, அதனால் துணி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போக்க அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கைத்தறியாளர்களைப் பொறுத்த வரையில், இந்த அரசு தவறுதலாகவே நடந்து கொண்டு வருகிறது. இன்று நாடு முழுவதும் அவர்கள் நியாயமான கோரிக்கைகளை வைத்துப போராடுகிறபோது, அவர்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் காண அரசு முற்பட வில்லை. ஒரு உதாரணம் சொல்கிறேன். கடந்த காலத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச்சேதத்தில் பரமக்குடியில் ஒரு கைத்தறி நெசவாளர் வைகை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார். அந்தப் பிணம் இராமனாதபுரம் கண்மாயில் மீன்களுக்கு இரையாகி விட்டது. அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்திற்கு உதவித் தொகை கேட்டு அரசுத் தரப்பில் தாசில்தார் வந்து நேரடியாக ரிப்போட்டு எழுதியது வாஸ்தவம்தான், அரசு உதவி கொடுக்கவேண்டும் என்று பரிந்துரை செய்த பின்பும், அந்தக் குடும்பத்திற்கு உதவித்தொகை 4 மாதங்கள் ஆகியும் இன்னும் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட சாதாரணமான ஏழை எளிய மக்களுக்கு, அவர்களின் குடும்பங்களுக்கு எந்தவிதமான உதவியையும் இந்த அரசு செய்ய வில்லையென்றால், இதைக் காட்டிலும் கைத்தறியாளர்கள் பிரச்சனையில் அரசு எப்படி நடந்து கொண்டு இருக்கிறது என்பதைக் காட்ட வேறு உதாரணம் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதைத் தடுக்கவும், இப்படிப்பட்ட நிலைமைகளை கருத்தில் கொண்டு, போராட்டத்தை நிறுத்தவும், அவர்களுக்கு வேலைகளை ஒழுங்காகத் தரவும், அவர்களுடைய வசதிகளைப்

[திரு. செ. சிவசாமி] [1979 மார்ச் 14

பெருக்கவும், போன்ற பல்வேறு விவரங்களைக் குறித்து விவாதிக்க, இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக தமிழ்நாட்டில், சேலம், தருமபுரி, கோவை, மதுரை போன்ற நகரங்களில் ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய எதிர்கால வாழ்விற்காக போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இன்று கைத்தறியே தங்களுடைய வாழ்வாக நம்பி வாழ்கிற கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற அடிப்படையில் நாள் தோறும் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்று அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி கூட ஒழுங்காகக் கிடைக்கவில்லை. அப்படி ஒழுங்காகக் கூலி கொடுக்காத காரணத்தால் முதலாளிகள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நூல் விலை உயர்ந்து இருப்பதால் துணியில் விலை உயர்ந்து இருக்கிறது. ஆகவே, மக்களின் வாங்கும் சக்தி குறைந்து இருப்பதால், கோடிக்கணக்கான கைத்தறித் துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் கைத்தறி நெசவாளர்களின் வேலை தட்டுப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 10-40]

அதுமட்டுமல்ல, சில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே இருந்த நிர்வாகிகளுடைய ஊழல் காரணமாக சேலம் போன்ற மாவட்டங்களில் 2,000 பேர்களுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்கூட கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டு, நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்களை எல்லாம், கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உதவி செய்து திறக்கச்செய்து, வேலையில்லாமல் கஷ்டப்படும் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த கைத்தறி நெசவுத் தொழில் என்பது தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான தொழில். குறிப்பாக அந்நியச் செலவாணி ஈட்டித்தருகிற ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் கடமை இந்த அரசுக்கு நிச்சயமாக இருக்கிறது. இந்தப் பிரச்சனை சம்பந்தமாக கழிந்த மாதம்

1979 மார்ச் 14] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

14-ந் தேதி தமிழ்நாட்டு நெசவாளர்கள் ஒரு போராட்டத்தை தொடங்க இருப்பதாகவும், அதில் ஒரு பகுதியாக சென்னை கோட்டையை நோக்கி ஊர்வலம் வருவதாகவும் அறிவிக்கப் பட்டது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு கேள்வியை அமைச்சரிடம் கேட்டேன். அப்போது அமைச்சரவர்களால் அதற்கு பதில் சொல்ல இயலவில்லை. கைத்தறி நெசவுத் துறை அமைச்சர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவாகள். ஈரோடு சென்னிமலை போன்ற பகுதிகளில் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அமைச்சரவர்கள் அந்த நேரத்திலே உரிய பரிகாரம் கண்டிருந்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சனை எழுந் திருக்காது.

குறிப்பாக, இராஜா சுப்பிரமணியம் குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டும் என்பது நெசவாளர்களுடைய முக்கியமான கோரிக்கை. இன்றைக்கு கோர்ட் மூலம் ஏற்பட்ட முடிவுகளைக் கூட நிறைவேற்ற முன்வராமல் இருக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். கோர்ட்டிலே, அந்த வழக்கின் மூலமாக நெசவாளர்களுக்கு சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. போனஸ் பெறுகிற உரிமை உண்டு என்று சொல்லியிருக் கிறார்கள். இப்போது முதலாளிகள் நூலை விற்க தனியாக பில் போட்டு கொடுத்துவிடுகிறார்கள். அதை துணியாக்கிய தற்குப் பின்னால் அதற்கு தனியாக கூலி கொடுக்கிறார்கள். அந்தவகையில் வீவர்ஸுக்கும் மாஸ்டர்ஸுக்கும் உள்ள ரிலேஷன் ஷிப்பைப் பிரிக்கிறார்கள். இதையெல்லாம் கவனத்திற்கொண்டு அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற அம்மையாருக்குள்ள அந்த மென்மையான உள்ளத்தோடு இந்தப் பிரச்சனையை பரிசிலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைப்பற்றி விரிவாக விவாதித்து, முடிவு செய்ய இந்த அவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, நெசவாளர் பிரச்சனை என்பது நீண்டநாட்களாக அவர்களுடைய கோரிக் கைகளின்படி அரசு பல நிவாரணங்களை அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தும்கூட இதுவரை அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. இராஜா சுப்பிரமணியம் அவர்களுடைய பரிந்துரைகளின்படி எடுக்க வேண்டிய நடவடிக்கை களைபூராவும் எடுக்கவில்லை என்ற முறையிலே கோரிக்கைகள் எல்லாம் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அரசு அதிலே போதிய கவனம் செலுத்தவில்லை.

அடுத்து, இந்த ஆண்டு நூல் விலை ஏறிய காரணத்தால் ஒரு குடும்பத்தில் 10 ரூபாய், 12 ரூபாய் கூலி பெற்றதற்குப் பதிலாக இன்றைக்கு 5 ரூபாய்தான் கிடைக்கிறது என்று சொல் கிறார்கள். ஊதியம் சரிபாதியாக குறைந்துவிட்டது. மாஸ்டர்

வீவர்கள் அவர்களிடம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களுடைய ஊதியத்தை அந்த அளவுக்கு குறைத்துவிட்டார்கள். ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும்போது, அதற்காக போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கும் போது திடீரென்று நூல் விலை இரண்டுமடங்குக்கு மேல் ஏறியதன் காரணமாக ஊதியம் குறைந்து, அவருடைய வருவாய் குறைந்து பல்வேறு தொல்லைகளுக்கும் கஷ்டங்களுக்கும் நெசவாளர்கள் ஆளானதால் அவர்கள் வாழ முடியாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் போராட்டம் தொடங்கி இருக்கிறார்கள். ஆகவே அரசு போதிய கவனத்தோடு உடனடியாக நூல் விலையை குறைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்தாலொழிய பரிகாரம் காண வழி இருக்காது. நெசவாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஊதியம் கிடைக்க வேண்டும்; மாஸ்டர் வீவர்ஸ் சரியாக கூலி கொடுக்க உத்தரவாதம் வேண்டும்; இராஜா சுப்பிரமணியம் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அமுலாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவைகள் பற்றி விரிவாக விவாதித்து பரிசீலிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* <u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:</u> தலைவரவர்களே, கடந்த 12, 13 ஆகிய தேதிகளில் மதுரை, கும்பகோணம், கோவை, செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும், திரு. ராஜா சுப்பிரமணியம் கமிட்டியினுடைய பரிந்துரைகளை அமுலாக்க வேண்டும் என்றும் கோரி மறியலில் ஈடுபட்டு வந்ததாகவும் 14-3-1979 அன்று குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர் ஆகிய இடங்களில் நெசவாளர்கள் கிளர்ச்சி செய்யப் போவதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதர மாவட்டங்களான இராமநாதபுரம், திருச்சி, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இதுவரை நெசவாளர் கிளர்ச்சிகள் எதுவும் நிகழவில்லை. தற்போது ஆறு தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்கள் கரூர், காஞ்சிபுரம், ஈரோடு, குறிஞ்சிப்பா... சேலம், மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 6,000 நெசவாளர்கள் வேலை பெற்றுள்ளனர். இந்நிலையங்களின் நெசவாளர்களின் எண்ணிக்கை 22,000 ஆக அடுத்த இரண்டாண்டுகளில் உயர்த்தப்படும். இந்நிலையங்களின் கிளைகள் அந்தந்த பகுதிகளில் தேவையான இடங்களில் நிறுவப்படும்.

நூல் விலை குறைப்பு சம்பந்தமாக தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. கைத்தறிக்கு நியாயமான விலையில் நூல் விற்பனை செய்ய 'டெக்ஸ்டைல் கார்ப்ரேஷன்' தமிழ்நாட்டில் பல இடங்களில் கிளைகள் திறந்துள்ளன.

நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சமீபத்தில் மதுரையில் கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றினைத் துவக்கியுள்ளோம். அது மட்டுமல்ல திரு. இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் அறிக்கைகளை அரசு பரிசீலித்து வருகிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு அதற்கென சட்டமுன்வடிவு இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவே கொண்டுவரவேண்டும் என அரசு முடிவெடுத்து அதற்காக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஏற்றுமதி தீவிரமாக இருப்பதால் மாஸ்டர் வீவர்கள் நல்ல கூலிகளை வழங்கி வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற கூலியை விட கூடுதல் அளவில் கூலி வழங்கப்படுகிறது. நெசவுத்தொழில் ஒரு சிறப்பான கட்டத்தை எய்தி வரும் இந்தச் சூழ்நிலையில் நெசவாளர்கள் கிளர்ச்சி, மறியல் போன்றவற்றில் ஈடுபட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். எனவே இதற்காக அரசின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை மேற்கு மாம்பலத்தில் 12-3-1979 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் தீ வைப்பு, கத்திக் குத்து, மத்திய போலீஸ் தடியடிப் பிரயோகம் ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமையைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால், திரு. து. புருஷோத்தமன், திரு. துரை முத்துசாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. மு. அம்பிகாபதி, திரு. சோ. அழகர்சாமி, திரு. செ. சிவசாமி, திரு. சேலம் மு. ஆறுமுகம். ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பதைச் மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.